இந்தியா சீனா, பாகிஸ்தான் உள்ளிட்ட பல நாடுகள் இணைந்து மிகவும் கொடூரமான தாக்குதல்கள் மூலம் சிங்கள அரசு தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஒடுக்கியிருக்கிறது.

2009 ஆம் ஆண்டில் மட்டும் இதுவரை ஒன்றரை இலட்சம் தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதில் குழந்தைகள் மட்டுமே எழுபதாயிரத்திற்கும் மேல் கொல்லப்பட்டுள்ளனர். வரலாற்றினை திருப்பிப்பார்த்தால் விடுதலைப் போராட்டங்களை எப்படித்தான் ஒடுக்கினாலும் அவை எந்த காலத்திலும் தோற்றதில்லை. எடுத்துக்காட்டாக இந்திய விடுதலைப் போராட்டங்களை எடுத்துக்கொண்டால் இருநூறு ஆண்டுகள் நடைபெற்றது. எனவே, இன ஒடுக்குமுறைக்கு நிரந்த தீர்வு காணும் வரை ஈழத்தில் தமிழர்களின் போராட்டம் மீண்டும் மீண்டும் தொடரும் என்றே கருதுகிறோம்.

நன்றி : கூகுல் தேடுதளம், மக்கள் தொலைக்காட்சியின் ஈழம் நேற்றும் இன்றும் ஆவணத்தொடர்

**ப. கார்த்திகேயன்,** வயது.17, மாதம்பட்டி.

## புகையிலைக்கெதிரான மக்கள் அறிக்கை



சென்ற முறை கரூர் பாராளுமன்ற உறுப்பினரும் 2009ஆம் ஆண்டின் கரூர் பாராளுமன்ற தேர்தலின் வேட்பாளருமான திரு. பழனிசாமி அவர்கள் 08.05.2009 அன்று கரூரில் உள்ள அரவாணம் பேட்டையில் தேர்தல் பரப்புரை செய்தார். அப்பொழுது வேர்கள் குழந்தைகளுக்கு மாநில அளவிலான தலைமைத்துவ பயிற்சி நடந்தது. இதில் குழந்தைகளால் வெளியிடப்பட்ட புகையிலை கட்டுப்பாட்டிற்கான மக்கள் அறிக்கை வெளியிடப்பட்டது. அப்பொழுது புகையிலைக்கெதிரான குழந்தைகளால் வெளியிடப்பட்ட மக்கள் அறிக்கையை வேட்பாளர் திரு. பழனிச்சாமி அவர்கள் பெற்றுக்கொண்டார். இதில் "நான் வெற்றி பெற்றால் இந்த புத்தகத்தில் வெளியிடப்பட்ட அனைத்து திட்டங்களையும் நிறைவேற்ற உழைப்பேன்" என்று கூறினார். அதே போல சென்னையில் புகையிலை இல்லா உலகம் நோக்கிய குழந்தைகளின் கூட்டமைப்பினர் அளித்த புகையிலை கட்டுபாட்டிற்ககான மக்கள் அறிக்கையை சென்னை மாநகர மேயர் திரு. சுப்ரமணி அவர்கள் பெற்றுக்கொண்டார்.



**அ. அருண்குமார்,** வயது 15,
மேக்கட்டான்பட்டி.
பொருளாளர், புதுக்கோட்டை மாவட்டம்.




# வேர்களின் குரல்

குழந்தைகளின் உரிமைகளை நிலைநாட்டுவதற்கான இதழ்

ஆடி - திருவள்ளுவர் ஆண்டு 2040 (சூலை - 2009) வேர் -1 குரல் - 3













## உலக புகையிலை எதிர்ப்பு நாள்

## 31-05-2009




மேக்ட் வேர்கள் குழந்தைகள் இயக்கத்தின் மாநில அளவிலான தலைமைத்துவப் பயிற்சி முகாம்
இடம் : அரட்ஸ் பயிற்சி மையம், அரவணாம்பேட்டை, கரூர்.
நாள் : 05.05.2009 முதல் 09.05.2009 வரை



மேக்ட் வேர்கள் குழந்தைகள் இயக்கத்தின் மாநிலக்குழு உறுப்பினர்கள்
(2009 - 2010)



# தமிழ் ஈழம் (ஈழத்தமிழர்கள்) குறித்த பார்வை




தமிழீழத்தின் வரைபடம்

சங்ககாலத்தில் தற்போது காணப்படும் இலங்கை தீவும் தமிழ்நாடும் ஒன்றாகவே இருந்துள்ளது. அது குமரிக்கண்டம் (லெமூரியா கண்டம்) என்று அழைக்கப்பட்டது. கடந்த 2004ஆம் ஆண்டு கடலில் ஏற்பட்ட ஆழிப்பேரலை போன்று சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்னர் மிகப்பெரிய கடற்கோள் ஏற்பட்டு குமரிக்கண்டம் இரண்டாகப் பிரிந்தது. வடக்கே நம் தமிழகமும், தெற்கே தென்நாடு என அழைக்கப்பட்ட ஈழமும் (இலங்கை) தனித்தனியாகப் பிரிந்தது. சங்க காலத்திலிருந்து தமிழர்களால் ஆளப்பட்ட ஈழத்தில் இந்தியாவின் வடபகுதியில் இருந்து நாடுகடத்தப்பட்ட வந்தேறி கூட்டம் ஒன்று தஞ்சமடைந்தது. இந்த மக்களே தற்போது சிங்களர் என அழைக்கப்படுகின்றனர். இந்த சிங்களர்களால் தமிழர்களின் பகுதிகள் சிறிது சிறிதாக களவாடப்பட்டது. ஆங்கிலேயர்களின் வருகைக்கு முன்னர் தமிழர்களும், மிகக்குறைந்த எண்ணிக்கையிலான வந்தேறி சிங்களவர் மட்டும் வாழ்ந்து வந்தனர். ஆங்கிலேயரின் வருகைக்குப் பின்னர் மலைப்பகுதிகளில் தேயிலை பயிரிடுவதற்காக இந்தியாவில் இருந்து தமிழகத் தமிழர்கள் வலுக்கட்டாயமாக தேயிலைத் தோட்டங்களில் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். ஆங்கிலேயர் விடுதலை கொடுக்கும் முன்னர் ஈழத்தமிழர்கள், மலையகத் தமிழர்கள், சிங்களர்கள் இவர்கள் அனைவரும் மூன்று பகுதிகளில் தனித்தனியாக வாழ்ந்து வந்தனர். விடுதலையின் போது சிங்களர் சூழ்ச்சி செய்து ஒன்றுபட்ட இலங்கையைப் பெற்றனர். தமிழர்கள் வழக்கம் போல இலங்கையிலும் புறக்கணிக்கப்பட்டனர்.

அக்காலக்கட்டத்திலிருந்தே முப்பது ஆண்டுகள் பல வகையான அமைதி வழிப்போராட்டங்கள் தமிழர்களுக்கான உரிமை கேட்டு நடந்து வந்தது. ஆனால் இப்போராட்டங்கள் அனைத்தும் சிங்களர்களின் சூழ்ச்சியால் தோற்கடிக்கப்பட்டது. இதனை உணர்ந்த தமிழர்கள் ஒன்றுபட்ட இலங்கையில் வாழமுடியாது என்ற முடிவுக்கு வந்தனர். சிங்களர்களின் இனவெறி காரணமாக தமிழர்கள் மீதான அடக்குமுறை தீவிரம் அடைந்ததால் அமைதி வழியிலான போராட்டங்கள் அனைத்தும் தோல்வியடைந்தன. இறுதியாக வேறு வழி இல்லாமல்தான் ஆயுதப் போராட்டத்தினை கையில் எடுத்தனர் தமிழர்கள். ஏறக்குறைய முப்பது ஆண்டுகளுக்கு மேல் நடைபெற்று வந்த இந்த போராட்டம்

# காட்சி ஊடகப் பயிற்சி

ஆஸ்மே இந்தியாவும், சமூகப்பணி மற்றும் ஆய்வு மையமும் இணைந்து சென்னையில் குழந்தைகளுக்கான **ஆவணப்பட பயிற்சி** ஒன்றை நடத்தின.

ஐந்து நாட்கள் நடைபெற்ற இப்பயிற்சியில் அருணோதயா குழந்தைகள் சங்க குழந்தைகளும், சகோ. சிகா. குழந்தைகள் சங்க குழந்தைகளும், காந்திகிராம பாலர்சபை குழந்தைகளும், மேக்ட் வேர்கள் குழந்தைகள் இயக்கத்திலிருந்து ச. சுபத்ரா, ஆ.ஜெயபாலன், அ. அருண்குமார், கா. இராகவேந்திரன், ம. முத்துலெட்சுமி ஆகிய ஐந்து குழந்தைகளும் பங்கேற்றனர்.



இந்த ஆவணப்பட பயிற்சியில் பல நிபுணர்கள் வந்து பயிற்சி அளித்தனர் இப்பயிற்சியில் திரு. இராஜ்குமார் அவர்கள் தனது நுட்பமான திரைப்பட அனுபவங்களை பகிர்ந்துகொண்டார். இயக்குநர். திரு. சரவணன் அவர்கள் ஒரு படத்தை எப்படி இயக்குவது என்பதை கற்றுத் தந்தார். திரு. ஜெரால்டு அவர்கள் வானொலியில் பேசவைத்தார். சந்தனக்காடு எனும் தொலைக்காட்சித் தொடரின் இயக்குநர்.திரு. கௌதமன் அவர்கள் தமிழர் என்ற உணர்வுடன் ஆவணப்பட நுட்பங்களைக் கற்றுத்தந்தார். அண்ணன் திரு. சுராஜ் கவி அவர்கள் படத்தொகுப்பு பற்றிய தொழில் நுட்பங்களை கற்றுத் தந்தார். மேலும் இசையமைப்பாளர் திரு. ஏ.ஆர்.இரகுமான் அவர்களுடைய இசை பதிவகத்தினை நிர்வகித்து வருகிற திரு. அப்பாஸ் ரபீக் அவர்கள் இசை பதிவு குறித்து கற்றுத் தந்தார். இயக்குநர் திரு. அசோக் அவர்கள் தொழில் நுட்பங்களை கற்றுதந்து ஆவணப்படங்களில் எவற்றை எல்லாம் கவனிக்க வேண்டும் என்று கற்றுத் தந்தார்.



இந்த ஆவணப்பட பயிற்சி மூலம் ஆவணப்படம் என்றால் என்ன, ஆவணப் படங்களை எப்படி இயக்குவது என்று செய்முறை பயிற்சிகளுடன் குழந்தைகள் கற்றுக்கொண்டனர். திரைப்படங்களை மட்டும் பார்த்துவந்த எங்களைப் போன்ற குழந்தைகள் திரைப்பட மாயையயின் உண்மைகளை நேரில் கண்டு அதிர்ந்தது மட்டும் இல்லாமல் ஆவணப்படங்களின், அவசியத்தையும் பயன்களையும் உணர்ந்து கொண்டனர். எப்படி படத்தின் கருவை தேர்வு செய்வது? எப்படி கதையாக மாற்றுவது? எப்படி திட்டமிடுவது என்றும் ஒரு ஆவணப்படத்தினை நாங்களாகவே எடுக்க முடியும் என்ற நம்பிக்கையை இப்பயிற்சி ஏற்படுத்தியுள்ளது. மேக்ட் குழந்தைகள் இயக்கம் சார்பில் ஆவணப்படம் ஒன்றை எடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**கா. இராகவேந்திரன்,** வயது : 13, இராசாளிப்பட்டி.



**வேர்களின் குரல்**

குழந்தைகளின் உரிமைகளை நிலைநாட்டுவதற்கான இதழ்

இதழாசிரியர் :
ச. சுபத்ரா
ஆசிரியர் குழு :
அ. அருண்குமார்
கா. இராகவேந்திரன்
ம. முத்துலெட்சுமி
பிரியங்கா
ம. சந்திரகுமார்
இரா. புவனேஸ்வரி
ரமணி
அ.மணிமேகலை
செ.சந்தியா
லோகேஸ்வரி
பொ.கார்த்திகேயன்
ர. சத்யா
ஆ. ஜெயபால்
த. கவியரசன்
நிழற்படம் :
த.முனியேந்திரன்
வடிவமைப்பில் உதவி :
முனைவர். இரா.ஜாக்குலின் மேரி

பொறுப்பாசிரியர் :
**த. சிரில் அலெக்சாண்டர்**

வேர் 1
குரல் 3

(தனி சுற்றுக்கு மட்டும்)

ஆடி
திருவள்ளுவர் ஆண்டு 2040
(சூலை - 2009)

தொடர்புக்கு :
**வேர்களின் குரல்**
மேரி ஆனி சேரிட்டி ட்ரஸ்ட் (மேக்ட்)
கதவு எண்.8,
பிளாட் எண். 39,
ஸ்டார்லிங் அப்பார்ட்மெண்ட்,
அக்பராபாத் இரண்டாம் தெரு,
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.
தொலைபேசி : 044 24721579
மின்னஞ்சல் : vergalinkural@gmail.com

## ஆசிரியர் பக்கம்

அன்பார்ந்த குழந்தைகளுக்கும், பெரியோர்களுக்கும், எங்கள் வளர்ச்சியில் தொடர்ந்து ஆதரவு தரும் அனைத்து நல்லுள்ளங்களுக்கும் வணக்கம்.

இதழியல் என்பது ஒரு சுவாரசியமான கலை. மிகப்பெரிய வல்லரசுகளைக் கூட சரியச் செய்த வல்லமை அதற்கு உண்டு. அதே போல் சாமானியனையும் சரித்திரத்தில் ஏற்றி விடும் ஆற்றலும் இதழியலுக்கு உண்டு.

இதழியல் என்பது முன்பு அச்சு இதழ்களை மட்டுமே குறித்தது. பின்பு அது வானொலியையும் தொலைக் காட்சியையும் சுட்டிக்காட்டியது. இப்போது கணிணி, வலைதளம், மின்னிதழ், குறுந்தகடு என்று விரிவடைந்து ஊடகம் என்ற புதிய பெயரும் பெற்றிருக்கிறது.

இதற்கு முந்தைய இரண்டு இதழ்களின் மூலம் பல கருத்துக்களை பரிமாறிக் கொண்டதில் எங்கள் உள்ளத்தில் மகிழ்ச்சி தோன்றினாலும், ஈழ தமிழர்களின் துன்பங்களை பார்க்கும் போது மகிழ்ச்சி மறைந்து மனதில் மிகப்பெரிய வலி ஏற்படுகிறது.

இந்த இதழில் எமது இயக்கத்தின் கிளையளவிலான செயல்பாடுகள், எமது வேர்கள் கூட்டமைப்பின் செயல்பாடுகள், புகையிலைக்கெதிரான குழந்தைகளின் கூட்டமைப்பு செயல்பாடுகள், ஊடகப் பயிற்சிகள் பற்றிய பகிர்வு, தமிழீழம் (இலங்கைத் தமிழர்) குறித்த பார்வை போன்றவைகளும் வெளியிட்டுள்ளோம்.

இந்த இதழ் தொடர்ந்து வெளிவரத் துணையாக இருந்து எங்களை ஊக்கப்படுத்தி வரும் அனைத்து நல்லுள்ளங்களுக்கும் இதழ் பற்றிய கருத்துக்களையும், பாராட்டுகளையும் பதிவு செய்த அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் ஆசிரியர் குழுவின் சார்பில் நன்றி கூறி, இதே உற்சாகத்துடன் மூன்றாவது இதழை வெளியிடுகிறோம்.



**ச. சுபத்ரா,**
இதழாசிரியர்,
வயது 15, இராசாளிபட்டி.
மாநில ஒருங்கிணைப்பாளர்,
புகையிலை இல்லா
உலகம் நோக்கிய குழந்தைகளின்
கூட்டமைப்பு, தமிழ்நாடு.

## மேக்ட் வேர்கள் குழந்தைகள் இயக்க கிளையளவிலான தலைமைத்துவப் பயிற்சி

கடந்த ஏப்ரல் இரண்டாவது வாரம் தொடங்கிய கிளையளவிலான தலைமைத்துவப் பயிற்சி ஒரு கிளைக்கு இரண்டு நாள் என முப்பது கிளைகளுக்கும் நடைபெற்றது. இதில் கிளை உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொண்டனர். இரண்டு பணியாளர்களும் ஒரு இளம் வழிநடத்துனரும் இணைந்து ஒரு கிளைக்கு பயிற்சி யளித்தனர்.


குழு விளையாட்டு
கவரப்பட்டி

இப்பயிற்சியின் முதல் நாள் குழந்தைகளின் உரிமைகள் பற்றிய விளக்கமும், இதுவரை குழந்தைகள் பெற்றுள்ள உரிமைகளையும், அவர்கள் பெறாத உரிமைகளையும் குழு ஆய்வுகள் மூலம் அடையாளம் காணப்பட்டது. குழந்தைகள் தாங்கள் வாழும் பகுதியின் உண்மை நிலவரத்தை உணர்ந்து கொள்வதற்காகவும், வள ஆதாரம், ஊரின் அமைப்பு ஆகியவற்றை தெரிந்து கொள்வதற்காகவும், ஊரின் வரைபடம் வரையும் பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும் குழந்தைகள் தங்கள் ஊரை சுற்றிப்பார்த்து ஊரின் வரைபடத்தை பெரிய அட்டைத்தாளில் வரையத் தொடங்கினார்கள் இத்துடன் முதல்நாள் நிகழ்வுகள் முடிந்தது.


குழு ஆய்வு
விருதாப்பட்டி

இரண்டாவது நாள் ஊரின் வரைபடம் வரைந்து முடிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து கிளை உறுப்பினர்கள் அனைவரும் கூடி பேசி ஏழு பேர் கொண்ட செயற்குழுவை தேர்ந்தெடுத்தனர். இந்த ஏழு பேரும் ஒன்று கூடி தங்களில் யார் செயற்குழு பொறுப்பாளர்கள் என்பதை தேர்வு செய்தனர். இவ்வாறாக கிளை செயற்குழு தேர்தல் நடைபெற்றது. கிளை செயற்குழுவில் தலைவர், துணைத்தலைவர், செயலாளர், இணைச் செயலாளர், பொருளாளர் ஆகிய பொறுப்பாளர்களுடன் இரண்டு செயற்குழு உறுப்பினர் இவர்கள் ஏழு பேரும் சேர்ந்துதான் கிளை செயற்குழுவாகிறார்கள். இறுதியாக பொதுவான பிரச்சனைகளின் அடிப்படையில் ஆண்டு செயல்திட்டம் போடப்பட்டது.

இப்பயிற்சியில் குழு விளையாட்டுகள், குழு ஆய்வுகள், பாடல்கள், செய்முறைப்பயிற்சி என பல சிறப்பம்சங்கள் காணப்பட்டது. இவை எல்லா குழந்தைகளுக்கும் மிகவும் பயனுள்ளதாக இருந்தது.


செயற்குழு தேர்தல்
இராசாளிப்பட்டி

**ச. சுபத்ரா,**
வயது 15, இராசாளிபட்டி. மாநில ஒருங்கிணைப்பாளர்,
புகையிலை இல்லா உலகம் நோக்கிய
குழந்தைகளின் கூட்டமைப்பு, தமிழ்நாடு.



# உலக புகையிலை எதிர்ப்பு நாள்

உலக புகையிலை எதிர்ப்பு நாளை முன்னிட்டு மேக்ட் வேர்கள் குழந்தைகள் இயக்க கூட்டமைப்பும் புகையிலை இல்லா உலகம் நோக்கிய குழந்தைகளின் கூட்டமைப்பும் இணைந்து 31.05.2009 அன்று பல இடங்களில் புகையிலைப் பேரணி, ஆர்ப்பாட்டம் மற்றும் கையெழுத்து இயக்கம் நடத்தப்பட்டது. அன்று காலை மணப்பாறையில் நடைபெற்ற பேரணியை புகையிலை இல்லா உலகம் நோக்கிய குழந்தைகளின் கூட்டமைப்பின் மாநில ஒருங்கிணைப்பாளர் ச. சுபத்ரா தலைமை தாங்கி தொடங்கி வைத்தார். புகையிலைக்கு எதிரான முழக்கங்கள் குழந்தைகளால் எழுப்பப்பட்டது. மேலும் இந்த நிகழ்வுகள் திருச்சி, விராலிமலை, புதுக்கோட்டை, மதுரை, திண்டுக்கல், சென்னை மற்றும் சென்னையை ஒட்டியுள்ள போரூர், பூந்தமல்லி, திருவள்ளூர், திருத்தணி, வியாசர்பாடி ஆகிய இடங்களில் நடத்தப்பட்டது. இதில் புகையில்லா உலகம் நோக்கிய குழந்தைகளின் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் பல்வேறு தொண்டு நிறுவனங்கள் மேற்கண்ட பகுதிகளில் பல்வேறு வகையான போராட்டங்கள் நடத்தின.




31.5.2009
உலக புகையிலை எதிர்ப்பு நாள் நிகழ்வுகளின் நாளிதழ் பதிவுகள்

**ம. முத்துலெட்சுசமி,** வயது 13, மாதம்பட்டி

**ஆண்டு செயல் திட்டம் (2009 - 2010)**

ஒவ்வொரு ஊரிலிருந்து வந்திருந்த குழந்தைகள் அனைவரும் அந்தந்த பகுதி பிரச்சனைகளை ஒட்டுமொத்தமாக தொகுத்து அதன் அடிப்படையில் ஆண்டு செயல் திட்டம் தயாரிக்கப்பட்டது.

| காலம் | செயல்பாடுகள் |
|---|---|
| 2009 மே 31 | புகையிலை எதிர்ப்பு நாள் |
| 2009 சூன் 12 | உலக குழந்தை தொழிலாளர் முறை ஒழிப்பு நாள் |
| 2009 சூலை - ஆகஸ்ட் | ஊருக்கு நூறு மரம் வளர்ப்போம் |
| 2009 அக்டோபர் | நூலக வசதி |
| 2009 நவம்பர் 20 | ஐக்கிய நாடுகள் சபையினால் குழந்தைகள் உரிமைகள் அங்கீகரிக்கப்பட்ட நாள். |
| 2010 சனவரி | பொங்கல் விழா |
| 2010 ஏப்ரல் 30 | குழந்தை தொழிலாளர் எதிர்ப்பு நாள் |






மேற்கண்ட நிகழ்வுகளுடன் தலைமைத்துவப் பயிற்சி இனிதாய் நிறைவுற்றது. இறுதி நாளில் அனைவரும் திருச்சிராப்பள்ளியில் உள்ள அண்ணா அறிவியல் மையம் சென்று பார்த்து வந்தோம்.

**அ. அருண்குமார்**, வயது : 15, மேகட்டான்பட்டி.



## மேக்ட் வேர்கள் குழந்தைகள் இயக்கத்தின் மாநில அளவிலான தலைமைத்துவப் பயிற்சி முகாம்

| இடம் : அரட்ஸ் பயிற்சி மையம் அரவணாம்பேட்டை, கரூர். | நாள் : 05.05.2009 முதல் 09.05.2009 வரை |
|---|---|

மேக்ட் வேர்கள் குழந்தைகள் இயக்க பொறுப்பாளர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி முகாம் நடைபெற்றது. இந்த பயிற்சியில் ஒவ்வொரு கிளை செயற்குழுவிலிருந்து ஒரு ஆண் ஒரு பெண் என இரண்டு குழந்தைகள் என்ற அடிப்படையில் மொத்தம் ஐம்பத்தாறு குழந்தைகள் கலந்து கொண்டனர்.

### பயிற்சி முகாமில் இடம் பெற்ற கருத்துகள்

- **தாய்மொழியின் அவசியம்**
- **தாய்மொழி புறக்கணிப்பு**
- **தாய்மொழியின் நன்மை**
- **தாய்மொழி வளர்ச்சிக்கான ஆலோசனை**
- **சாரா அவர்களின் தாய்மொழி பற்றிய பகிர்தல்**
- **மண்சார்ந்த கலைகள்**
- **சாதிகள் குறித்த ஒரு பார்வை**
- **தமிழீழம் பற்றிய புரிதல்கள்**
- **அச்சு ஊடகம் குறித்த ஒரு பார்வை**
- **எனது கிராமத்தில் வேலிக்கருவையினால் ஏற்படும் பாதிப்புகள்**
- **வேம்பு என்னும் மூலிகை மரம்**
- **"ஊருக்கு நூறுமரம் வளர்ப்போம்" திட்டமும் அதன் பயன்களும்**
- **தேர்தல் 2009 - 2010**
- **ஆண்டு செயல் திட்டம் (2009-2010)** ஆகிய தலைப்புகளின் அடிப்படையில் தலைமைத்துவப் பயிற்சி முகாம் நடைபெற்றது. இந்த தலைப்புகளின் விளக்கம் பின்வருமாறு.

**தாய்மொழியின் அவசியம்**

ஒருவரோடு மற்றொருவர் தாய்மொழியில்தான் எளிதில் தொடர்புகொள்ள முடியும். நம் தாய்மொழியை விட்டு விட்டு பிற மொழிகளை கற்பது எளிதானது அல்ல. நம் தாய்மொழி எழுதுவதற்கும், பேசுவதற்கும் சிறப்பான மொழி.

**தாய்மொழி புறக்கணிப்பு**

தமிழ் மக்கள் தமிழில் பேச வேண்டும். தமிழ் மக்கள் தமிழை புறக்கணித்து விட்டு பிற மொழிகளை கற்பதும், பேசுவதும் தாய்மொழியின் அழிவிற்கே வழிவகுக்கும். இன்று பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் நம் தாய்மொழியாம் தமிழ் மொழியை புறக்கணிக்கின்றனர்.

**தாய்மொழியின் நன்மைகள்**

நாம் மற்றவரோடு எளிதாக பேச தாய்மொழி உதவுகிறது. வருங்கால தலைமுறையினரும் தமிழ் மொழியை பற்றி அறிந்து கொள்ள வேண்டும். இம்மொழி கற்பதற்கும் மிகவும் எளிதாக உள்ளது. மேலும் மிகவும் பழமையான மொழி என்ற சிறப்பையும், செம்மொழி என்ற பெருமையையும், நம் தாய்மொழியாம் தமிழ் மொழி பெற்றுள்ளது.

**தாய்மொழி வளர்ச்சிக்கான ஆலோசனை**

மாநில அரசுக்கு தமிழ் மொழி வளர்ச்சியில் ஆர்வமும், அக்கறையும் இருக்க வேண்டும். தமிழ் மொழி வளர்வதற்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். தமிழில் பேசும்போது பிறமொழிச் சொற்களை குறைத்துக்கொண்டு முழுமையாக தமிழில் பேச வேண்டும்.

**சாரா அவர்களின் தாய்மொழி பற்றிய பகிர்தல்**

பிரான்சு நாட்டிலிருந்து வந்திருந்த சிறப்பு விருந்தினர் சாரா அவர்கள் தமது நாட்டின் தாய்மொழி குறித்த அனுபவங்களை பகிர்ந்து கொண்டார். அதில், தங்கள் நாட்டில் ஆங்கிலம் பேசுவோர் எண்ணிக்கை மிகவும் குறைவு எனவும், கல்வியில் முழுமையாக தாய்மொழியில் மட்டுமே பயில்வதாகவும், பிரான்சு அரசு தாய்மொழி கல்விக்கும், வளர்ச்சிக்கும் மிகுந்த அக்கறையோடும், கவனத்தோடும் பாதுகாப்பு வழங்குகிறது என்று தனது அனுபவத்தை பதிவு செய்தார்.

**மண்சார்ந்த கலைகள்**

கரகாட்டம், மயிலாட்டம், கும்மியாட்டம், ஒயிலாட்டம், சிலம்பாட்டம் காவடியாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், புலியாட்டம், தப்பாட்டம், கரடியாட்டம், தெருகூத்து, நாடகம், மஞ்சுவிரட்டு, பாவைகூத்து, நாட்டுப்புறப்பாடல் போன்ற கலைகள அடையாளங்காணப்பட்டன.

**சாதிகள் குறித்த ஒரு பார்வை**

சாதியம் குறித்த தெளிவுக்காக சாதியின் தோற்றமும், சாதியத்தை தோற்றுவித்தவர்களையும், அதனால் பயனடைந்தவர்களையும், பாதிக்கப்பட்டவர்களையும் குறித்து விவாதிக்கப்பட்டது. இறுதியில் குழந்தைகள் அனைவரும் **“சாதிபாகுபாடு பார்க்கமாட்டோம்”** என்று உறுதியேற்றனர்.

**இலங்கையில் தமீழ்ழம் குறித்த ஒரு பார்வை**

தமிழ்நாட்டில் சங்க காலத்தில் பெரிய கடற்கோள் உருவானதால் தென்நாடு என்ற ஒரு தனித்தீவு பிரிந்தது. அதனுடைய பெயர் தமிழீழம் (இலங்கை). அங்கு வசிக்கும் மக்கள் நம் தமிழ் மக்கள். அவர்கள் இங்கிருந்து சென்றவர்கள் அல்ல. அவர்கள் பூர்வீக குடிமக்கள். சிங்கள அரசு ஒவ்வொரு நாளும் பல ஆயிரம் தமிழர்களை கொன்று குவித்து வருகிறது. இதைப் பார்த்து எங்கள் மனம் மிகவும் வேதனைப்படுகிறது.

**அச்சு ஊடகம் குறித்த ஒரு பார்வை**

அச்சு ஊடகத்தை பற்றி திரு. செரால்டு அவர்கள் எங்களோடு பகிர்ந்துகொண்டார். கதை எழுதுவது எப்படி என்றும், எதை அடிப்படையாக வைத்து கதை எழுத வேண்டும் என்றும் கற்றுக்கொடுத்தார். இதன் மூலம் குழந்தைகளாகிய நாங்கள் அனைவரும் கதை எழுதும் முறையை கற்றுக்கொண்டோம்.



**எனது கிராமத்தில் வேலிக்கருவையினால் ஏற்படும் பாதிப்புகள்**

வேலிக்கருவை மரத்தினால் மண் வளம் குறைகிறது. நீர்வளம் குறைகிறது, நிலம் பாதிப்படைகிறது. நிலத்தடி நீரை பல மடங்கு உறிஞ்சுகிறது. மற்ற தாவர இன வளர்ச்சியை பாதிக்கிறது. விறகு எரிப்பதால் கண்கள் பாதிக்கப்படுகிறது. குழந்தைகள் “நாங்கள் அனைவரும் வேலிக்கருவையை அழிப்போம்” என்று உறுதி எடுத்துக்கொண்டனர்.

**வேம்பு என்னும் மூலிகை மரம்**

வேப்பமர நிழல் குளிர்ச்சி அளிக்கிறது. வேப்பங்கொட்டையிலிருந்து வேப்பெண்ணெய் தயாரிக்கப்படுகிறது. வேம்பில் நோய் எதிர்ப்பு தன்மை அதிகமாக இருக்கிறது. அம்மை நோய் வேப்பிலையின் மூலம் குணமாகிறது. வேம்பு பலவகையான பலன்களை தருகிறது.

**“ஊருக்கு நூறு மரம் வளர்ப்போம்” திட்ட மும் அதன் பயன்களும்**

“ஊருக்கு நூறு மரம் வளர்ப்போம், ஊரையே மாற்றிக் காட்டுவோம்” என்று “பொது இடங்களில் விளம்பரப் பலகை வைக்க ஊராட்சித் தலைவரிடம் அனுமதி கேட்போம். சாலை ஓரத்தில், கோவில், வீட்டிற்கு முன் பகுதியில் மரக்கன்றுகளை நட்டு நல்ல பயனை பெறுவோம், மரம் வளர்ப்போம். மழை பெறுவோம்” என முடிவெடுத்தனர்.

## தேர்தல் (2009-2010)

தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் விபரம் பின் வருமாறு

**மாநிலக்குழு உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| இரா. புவனேஸ்வரன் | ம. சந்திரகுமார், | பொ. கார்த்திகேயன், |
| பொ. சங்கர், | செ. சந்தியா, | ஆ. ஜெயபாலன் |

**புதுக்கோட்டை மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் :**

தலைவர் : ஆ. ஜெயபாலன் — துணைத்தலைவர் : த. மணிகண்டன்

செயலாளர் : செ. சந்தியா — இணை ச்செயலாளர் : அ. மணிமேகலை

பொருளாளர் : அ. அருண்குமார்

புதுக்கோட்டை மாவட்ட செயற்குழு

